recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

(3) அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவு

MR. CHAIRMAN : In partial modification of the programme of business of the Council, the Business Advisory Committee at its meeting held today has decided that the discussion on the Policy Note on Industries will take place on the 28th March and the discussion on the Policy Note on Local Administration will take place on the 4th April 1974.

3. கவன ஈர்ப்பு.

திருவல்லிக்கேணி, பண்டி வெங்கடேச நாயக்கர் தெருவிலுள்ள ஸ்ரீசர்வ சக்தி விநாயகர் கோவிலை சென்னை கார்ப்பரேஷன் ஊழியர்கள் அகற்ற முயற்சித்ததால் ஏற்பட்டுள்ள அமைதியின்மை குறித்து

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, திருவல்லிக்கேணி, பண்டி வெங்கடேச நாயக்கர் தெருவிலுள்ள ஸ்ரீ சர்வசக்தி விநாயகர் கோவிலை சென்னை கார்ப்பரேஷன் ஊழியர்கள் 14—3—1974 அன்று அகற்றும் முயற்சியில் ஈடுபட்டு, அதன் மேல் கூரையைப் பிரிக்க முயன்றதன் விளைவாகப் பொது மக்களிடத்தில் அமைதியின்மை ஏற்பட்டிருப்பது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மாண்புமிகு மேலவைத் தலைவரவர்களே, 12—9—1972 அன்று அறநிலைய பாதுகாப்பு அமைச்சரின் அறையில் நடந்த அரசு அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும், உள்ள நடைபாதை கோவில்களினால் ஏற்படும் இடையூறுகள் பற்றி விவாதிக்கப்பட்டு அனுமதியில்லாமல் நடைபாதைகளில் கோவில்கள் கட்டப்படுவதைத் தடுக்க, நகராட்சி, மாநகராட்சி ஆணையர்களுக்கு ஆணை பிறப்பிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நகராட்சி, மாநகராட்சி ஆணையர்கள், தற்போதுள்ள சட்ட விதிகளின் கீழ் நடைபாதைகளில் ஆக்ரமிப்பு செய்து அனுமதியில்லாமல் கட்டப்பட்ட கோவில்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இது குறித்து அரசு ஆணை எண் 1982, ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறை, நாள் 28—5—1973-ல் தக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருவல்லிக்கேணி, பண்டி வெங்கடேச நாயக்கர் தெருவிலுள்ள ஸ்ரீசர்வசக்தி விநாயகர் கோவிலை சென்னை கார்ப்பரேஷன் ஊழியர்கள் அகற்ற முயற்சித்ததால் ஏற்பட்டுள்ள அமைதியின்மை குறித்து

4—7—1973 அன்று சென்னை காவல் ஆணையர் எல்லா அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டம் ஒன்றைக் கூட்டினர். அக்கூட்டத்தில் எல்லா அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டார்கள். விவாதத்திற்குப் பிறகு, நடைபாதைகள் ஓரங்களிலும், பொது இடங்களிலும் உள்ள மன்றங்களை அகற்ற வேண்டுமென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மேற்படி கூட்டத்தில் சென்னை காவல் ஆணையர், பொது நலனைக் கருதி, நடைபாதைகளில் போக்குவரத்து இடைஞ்சலாக உள்ள கொடிகள், கொடி மரங்கள், மற்ற மன்றங்களை அகற்றுவதற்கு நகராட்சிகளுடனும், காவல் துறையினருடனும் எல்லா அரசியல் கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திருவல்லிக்கேணி வட்டம் 89-ல் ஆலங்காத்த பிள்ளை தெருவும் பண்டி வெங்கடேச நாயக்கர் தெருவும் சந்திக்கும் இடத்தில் 1973-ம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி பண்டிகை அன்று கூரையாலும் துத்தநாகத் தகட்டினாலும் சர்வ சக்தி விநாயகர் சிலைக்கு மேலே, மாநகராட்சித் தெருவில் ஆக்ரமிப்பு செய்து கட்டப்பட்ட கூரையினைப் பிரிப்பதற்காக சென்னை மாநகராட்சியினரால் செயல்முறைத் திட்டம் வகுக்கப்பட்டது. அதன் தொடர்பாக, 87-வது 89-வது வட்ட மாநகராட்சித் தொழிலாளர்கள் உதவியுடனும், ஐஸ் ஹவுஸ் காவல் நிலையத்தைச் சார்ந்த மூன்று காவலர்கள் உதவியுடனும், மாநகராட்சி 9-வது வட்ட மேற்பார்வையாளர், 14—3—1974 அன்று 9-00 மணி அளவில் செயல் படுத்தினர்.

மேற்படி கூரையைப் பிரிப்பதற்காக இருந்த அன்றையதினம் வீதியிலே கடை வைத்திருந்த காய்கறி வியாபாரிகளும், அந்த வட்டத்து மக்களும் கூட்டமாகக் கூடினர். இச்செய்தி வேகமாக அவ்வட்டத்தில் பரவவே மதிய உணவுக்காக வெளியே வந்த ஹிந்து மற்றும் தேசிய உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் கெல்லட் உயர்நிலைப்பள்ளி மாணவர்களும் காய்கறி வியாபாரிகளுடன் சேர்ந்துகொண்டு, கூரையைப் பிரிப்பதற்காக வேலை செய்து கொண்டிருந்த மாநகராட்சி சிப்பந்திகளைத் தடுத்தனர். அதுவுமின்றி மாநகராட்சி மேற்பார்வையாளர் மீதும் மற்ற வேலையாட்கள் மீதும் கற்களை வீசினர்.

டி-3 காவல் நிலையத்தினரால் அனுப்பப்பட்ட மூன்று காவலர்கள் மட்டும் இருந்ததால், அங்கே நிலவிய குழப்பத்தை அடக்கி, சட்டத்தை நிலைநாட்ட முடியாமல் போய்விட்டது. இந்நிலை மோசமடைவதற்கு முன்பாக,

திருவல்லிக்கேணி, பண்டி வெங்கடேச நாயக்கர் தெருவிலுள்ள ஸ்ரீசர்வசக்தி விநாயகர் கோவிலை சென்னை கார்ப்பரேஷன் ஊழியர்கள் அகற்ற முயற்சித்ததால் ஏற்பட்டுள்ள அமைதியின்மை குறித்து

1974 மார்ச் 26] *[திரு. அ. பெ. தர்மலிங்கம்]*

மாநகராட்சி மேற்பார்வையாளர் டி-3 காவல் நிலையத்து இன்ஸ்பெக்டரை அணுகி, ஆயுதப்படை ஒன்றை விநாயகர் கோவில் உள்ள கூரையைப் பிரிப்பதற்காக உடனடியாக அனுப்புமாறு கேட்டுக்கொண்டார். உடனடியாக ஆயுதப் படையை அனுப்புவதற்குத் தன்னால் இயலாது என்றும் விநாயகர் சிலையின் மீதுள்ள கூரையைப் பிரிக்கும் வேலையைத் தள்ளிப் போடலாம் என்றும் டி-3 காவல் நிலையத்து இன்ஸ்பெக்டர் ஆலோசனை கூறினார். மேற்படி கூரையை குறிப்பிட்ட நாளில் பிரிக்க சென்னை மாநகராட்சியினால் முடியாமற்போய்விட்டது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, சாதாரணமாக நகர எல்லைக்குட்பட்ட இடங்களிலே புதிதாக ஒரு கட்டிடத்தைக் கட்டுவதற்கோ அல்லது உள்ள கட்டிடத்திலே கூரை போடுவதற்கோ முன்பாக அனுமதி பெற வேண்டும். அப்படி அனுமதியைக் கோரிப்பெறவில்லையெனில் அதைத் தடை செய்யலாம் என்று நகராட்சிச் சட்டத்திலே விதிகள் இருக்கின்றன. அப்படி அனுமதி பெறுமலேயே கூரையை வேய்ந்தார்கள் என்றால், அது போடப்படும் வரையில் நகராட்சி அலுவலர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்கள்? கட்டிய பிறகு அதை இடிக்கப்போய் 'கட்டிய கோவிலை இடித்தார்கள்' என்ற அவச்சொல் அரசுக்கு வருவதைத் தடுக்கும் முறையில் முன்கூட்டியே நடவடிக்கை எடுக்கவில்லையா? இதுபற்றி அரசு என்ன கருதுகிறது என்று அறிய விழைகின்றேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இந்த சம்பவத்திற்குப் பிறகு நானே அந்த இடத்தை நேரிலே பார்வையிட்டேன். அது கோவில் என்ற வகையில் இல்லாமல் ஒரு வீட்டையொட்டிய தாழ்வாரத்தில் போடப்பட்டுள்ள கொட்டகை. அது பெரிய கோவிலாக இல்லை. சாதாரணமாகப் போடப்பட்ட கொட்டகைதான். ஒரு விக்ரகம்—சிலை மட்டும் அதில் இருக்கின்றது. திடீரென்றுதான் அந்தக் கொட்டகை போடப்பட்டிருக்கின்றது. பழைய கீத்துகளால் போடப்பட்டிருந்ததால், ஆண்டுக்கணக்கைக் கூடச் சொல்ல முடியவில்லை. திடீரென்று பிள்ளையார் தோன்றும் இந்த நகரிலே திடீர் கூரையும் அங்கே தோன்றியிருந்தது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: தலைவரவர்களே, இனியாவது இப்படி நகராட்சி, ஊராட்சிக்கு உரிய இடங்களிலே இப்படிப்பட்ட கொட்டகைகளைப் போடத் தொடங்குவதற்கு முன்பே உரிய நடவடிக்கைகளை எடுக்கத்தக்க பரிந்துரைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கும்படி வேண்டுகிறேன்.

22 திருவல்லிக்கேணி, பண்டி வெங்கடேச நாயக்கர் தெருவிலுள்ள ஸ்ரீசர்வசக்தி விநாயகர் கோவிலை சென்னை கார்ப்பரேஷன் ஊழியர்கள் அகற்ற முயற்சித்ததால் ஏற்பட்டுள்ள அமைதியின்மை குறித்து

[1974 மார்ச் 26

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அதை ஆட்சி மன்றத்தில் உள்ளவர்கள் எடுத்துக்கொள்ளுகின்றதைவிட ஆத்திகத்தில் நம்பிக்கை கொண்டவர்கள், ஆத்திகத்தில் ஈடுபாடு கொண்டவர்கள், இப்படித் தெரு ஓரங்களிலே கட்டப்படும் கோவில்களுக்கு மதிப்பில்லை என்ற உண்மையை எடுத்துச் சொல்லி, முன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

(பிற்பகல் 4-30)

4. 1973-74 ஆம் ஆண்டிற்கான துணைச் செலவு குறித்த இறுதி விவர அறிக்கையை வெளியிடுதல்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

1973–74 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம் மன்றத்தின் கண் வைகக முன்வந்துள்ளேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான அறிக்கை இம் மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது. மானியக கோரிக்கைகளின் மொத்தத் தொகை 53.91 கோடி ரூபாயாகும். இதில் 35.15 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கைச் சேர்ந்ததாகும்; எஞ்சிய தொகை மூலதன, கடன் கணக்குகளைச் சேர்ந்ததாகும். மொத்த மானியக் கோரிக்கையில், 53.54 கோடி ரூபாய் அனுமதித்த இனங்களின்கீழும், 37 இலட்சம் ரூபாய் சார்ட்டிய இனங்களின்கீழும் அமையும். இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கிய செலவினங்கள் சிலவற்றை இப்போது குறிப்பிட விழைகிறேன்.

2. நடப்பு ஆண்டில் இருந்து அரசு அலுவலாளர்களின் சம்பளம் அந்தந்தத் திங்களின் கடைசி வேலை நாளிலேயே கொடுக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. குறிப்பாக, ஒரு வரையறைக்குட் பட்ட ஊதியம் வாங்கும் அலுவலாளர்கட்கு மார்ச் திங்களுக்கான ஊதியம் 1974 ஏப்ரல் 1-ம் தேதிக்கு மாறாக, மார்ச் 30-ம் தேதியிலேயே கிடைக்கும். ஆகவே, 1973-74 ஆம் ஆண்டின் கணக்கிலேயே 12 திங்களுக்குப் பதிலாக 13 திங்கள் சம்பளத்திற்கான செலவு சேரும். ஒரு திங்கள் கூடுதலாகச் சம்பளம் இவ்வாண்டுக் கணக்கில் சேருவதால், நமக்கு 10 கோடி ரூபாய் செலவாகிறது. இத் தொகை எல்லா மானியக் கோரிக்கைகளிலும் விரவிக் கிடக்கிறது.